"MAALAI MALAR"

DATE: 04.02.2023 PAGE NO: 03

# புதுவை பல்கலைக்கழக துணைவேந்தருக்கு விருது

புதுச்சேரி, பிப்.4—

புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத்சிங், கற்பித்தல், ஆராய்ச்சி, சமூகம், முன்மாதிரியாக பணியாற்றியதற்காக டெல்லி செயின்ட் ஸ்டீபன் கல்லூரியின் உயரிய விருதான இல்லஸ்ட்ரீஸ் ஸ்டீபன் விருது பெற்றுள்ளார். துணைவேந்தர் பல்வேறு நாடுகளில் கல்விப்பணியில் இருந்துள்ளார். இப்போது ஜப்பான் இஷிகாவில் உள்ள மேம்பட்ட அறிவியல்; தொழில்நுட்ப நிறுவனத்தில் சிறப்பு பேராசிரியராகவும் உள்ளார்.

150—க்கும் மேற்பட்ட ஆய்வு கட்டுரைகளை வெளியிட்டு ஆராய்ச்சி திட்டங்களை முடித்துள்ளார். லண்டன் ராயல் சொசைட்டி ஆப் கெமிஸ்ட்ரி உட்பட பல நிறுவனங்களின் கவுரவ உறுப்பினராகவும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

DINAMALAR

4 FEB 2023

PAGE 2

# புதுச்சேரி பல்கலை., துணை வேந்தருக்கு விருது

**புதுச்சேரி, பிப். 4–**

புதுச்சேரி பல்கலை துணைவேந்தர் குர்மீத் சிங்கிற்கு இல்லஸ்ட்ரியஸ் ஸ்டீபனியன் விருது வழங்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக செய்திக்குறிப்பு:

புதுச்சேரி பல்கலையின் துணை வேந்தர் குர்மீத் சிங், கற்பித்தல், ஆராய்ச்சி, சமூகம் மற்றும் முன்மாதிரியாக பணியாற்றியதற்காக டெல்லி செயின்ட் ஸ்டீபன்ஸ் கல்லூரி உயரிய விருதாக கருதப்படும் இல்லஸ்ட்ரியஸ் ஸ்டீபனியன் விருது வழங்கப்பட்டுள்ளது.

துணைவேந்தர் குர்மீத் சிங் ஹங்கேரி, ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், கொரியா, தாய்லாந்து மற்றும் கென்யா ஆகிய நாடுகளில் கல்விப் பணிகளில் இருந்துள்ளார்.

தற்போது, ஜப்பானின் இஷிகாவாவில் உள்ள ஜப்பான் மேம்பட்ட அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தில் சிறப்பு பேராசிரியராக உள்ளார். மேலும் இவர், 150க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டு பல ஆராய்ச்சி திட்டங்களை வெற்றிகரமாக முடித்துள்ளார்.

லண்டனில் உள்ள ராயல் சொசைட்டி ஆப் கெமிஸ்ட்ரி மற்றும் எலக்ட்ரோ கெமிக்கல் சயின்ஸ் டெக்னாலஜியின் முன்னேற்றத்திற்கான சொசைட்டியின் பெல்லோஷிப் உள்ளிட்ட ஆய்வு நிறுவங்களின் கவுரவ உறுப்பினராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங்கிற்கு இல்லஸ்ட்ரியஸ் ஸ்டீபனியன் விருது வழங்கப்பட்டுள்ளது.

செவ்வாயில் பொருள் வாங்கினால்-செல்வம் பொங்கும்